# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 146/மா/2022**

**நாள் : 09.11.2022**

**திரு. R. செந்தில்குமார்,**
கம்பரசம்பேட்டை, திருச்சிராப்பள்ளி – 620101.
**திரு.ஜெ.ஜெயக்குமார்,**
தில்லை நகர், திருச்சிராப்பள்ளி – 620 018. – முறையீட்டு மனுதாரர்கள்

உதவி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
ஸ்ரீரங்கம் கோட்டம், திருச்சிராப்பள்ளி. – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கம்பரசம்பேட்டை, வடக்குத்தெரு, எண்.4/2–ல் வசிக்கும் திரு. R. செந்தில்குமார் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அண்ணாமலை நகர், தில்லை நகர், தாமரை சாலை, கதவு எண்.20/1ல் வசிக்கும் திரு.ஜெ.ஜெயக்குமார் ஆகியோரின் 01.09.2022 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 07.09.2022-ல் பெறப்பட்டு 146/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டன. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கம்பரசம்பேட்டை, வடக்குத்தெரு, எண்.4/2–ல் வசிக்கும் திரு. R. செந்தில்குமார் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அண்ணாமலை நகர், தில்லை நகர், தாமரை சாலை, கதவு எண்.20/1ல் வசிக்கும் திரு.ஜெ.ஜெயக்குமார் என்பவர்கள் தங்களது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்கள்:

" திருச்சி மாநகராட்சி, திருச்சி மேற்கு வட்டம், கோ அபிஷேகபுரம் கோட்டம் மற்றும் கிராமத்திற்கு உட்பட்ட நகர சர்வே வார்டு AA பிளாக் 1, டவுன் சர்வே எண்.1, நகர சர்வே வார்டு AA பிளாக் 1, டவுன் சர்வே எண்.6 மற்றும் நகர சர்வே வார்டு AA பிளாக் 1 டவுன் சர்வே எண் 8 ஆகிய

மூன்று சர்வே எண்ணில் உள்ள வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து தனியார் பள்ளி உரிய கட்டிட அனுமதி பெறாமலும் சட்ட விரோதமாக கட்டடம் அமைத்துள்ளனர்.

தமிழ்நாடு நகராட்சிகள் கட்டட விதிகள் 1972ன் விதி 7ல் குறிப்பிட்டுள்ளபடி நீர்நிலையை ஒட்டி 15 மீட்டர் தொலைவுக்கு எந்தவிதமான கட்டிட அனுமதி வழங்கக்கூடாது என்ற விதி இருந்தும் மேற்கண்ட கோ அபிஷேகபுரம் கோட்டம் நகர சர்வே வார்டு AA பிளாக் 1, டவுன் சர்வே எண்.1, நகர சர்வே வார்டு AA பிளாக் 1, டவுன் சர்வே எண்.6 மற்றும் நகர சர்வே வார்டு AA பிளாக் 1 டவுன் சர்வே எண் 8 ஆகிய மூன்று சர்வே எண்ணில் உள்ள வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து தனியார் பள்ளி உரிய கட்டிட அனுமதி பெறாமலும் சட்ட விரோதமாக பள்ளி கட்டடம் அமைத்துள்ளனர்.

மேற்கண்ட தனியார் பள்ளி உரிய கட்டிட அனுமதி பெறாமலும் சட்ட விரோதமாக கட்டப்பட்ட கட்டிடம் குறித்த சட்ட நடவடிக்கை எடுக்க திருச்சி மாநகராட்சி கோ அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையர் அவர்களால் பலமுறை அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டும் பள்ளி நிர்வாகம் சார்பில் உரிய பதில் ஏதும் அளிக்கவில்லை. இந்நிலையில் கோ அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையர் அவர்கள் கடந்த 03.06.2019 தேதியன்று உரிய கட்டிட அனுமதி பெறாமலும் சட்ட விரோதமாக கட்டப்பட்ட தனியார் கட்டிடத்திற்கு சீல் வைக்க காவல்துறையின் உரிய பாதுகாப்போடு சென்றபோது சில உயரதிகாரிகளின் சிபாரிசு மற்றும் அரசியல் பிரமுகர் தனியார் பள்ளிக்கு சார்பாக பேசியதால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் மாநகராட்சி அதிகாரிகள் திரும்ப வந்துள்ளனர்.

எனவே இம்மனு மூலம் வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்தும், உரிய கட்டிட அனுமதி பெறாமலும் சட்ட விரோமாக கட்டி முடிக்கப்பட்ட தனியார் பள்ளி கட்டிடம் குறித்து விசாரணை செய்தும் மற்றும் வாய்க்காலில் தனியார் பள்ளி கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று கொண்டு இருந்தபோது உரிய சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்காமல் கண்டும் காணாமல் இருந்த கோ அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

2) முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 21.09.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 07.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 19.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் திரு ஜெ.ஜெயக்குமார் 19.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். மற்றொரு மனுதாரர் திரு செந்தில்குமார் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ.அபிஷேகபுரம் கோட்டத்தில் டவுன் சர்வே எண்1, நகர சர்வே வார்டு AA பிளாக் 1, டவுன் சர்வே எண் 6 மற்றும் நகர சர்வே வார்டு AA பிளாக் 1 டவுன் சர்வே எண் 8 ஆகிய 3 சர்வே எண்ணில் உள்ள வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து தனியார் பள்ளி உரிய கட்டிட அனுமதி பெறாமல் சட்ட விரோதமாக கட்டடம் அமைத்துள்ளனர். நீர் நிலையையொட்டி 15 மீட்டர் தொலைவுக்கு கட்டடம் கட்ட அனுமதி வழங்கக்கூடாது என விதிகள்

இருந்தும் மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து தனியார் பள்ளி அமைத்துள்ளனர். இது குறித்து கோ அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையருக்கு பலமுறை புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. எனவே வாய்க்காலை ஆக்கிரமித்து தனியார் பள்ளி கட்டப்பட்டுள்ளதை கண்டும் காணாமலும் உள்ள மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், மேலும் மேற்கண்ட பள்ளியின் மீதும் உரிய நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 19.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்-4ன் உதவி ஆணையர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 52, கோ அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட சர்வே வார்டு எண் AA பிளாக் 1 நகரபுல எண் 2/3, 2/4 என்ற இடத்தில் அமைந்துள்ள கமலா நிக்கேத்தன் பள்ளி கட்டடம் அனுமதியின்றி கட்டப்பட்டு வருவதை அறிந்து, அப்பள்ளிக்கட்டடத்திற்கு Lock and Seal கடந்த 26.04.2019 அன்று மனுதாரருக்கு வழங்கப்பட்டது. ஆனால் பள்ளி நிர்வாகம், தங்களது கட்டத்திற்கு கட்டட அனுமதி வேண்டி மேல் முறையீடு மனு மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டு, அம்மனு மாநகராட்சியால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து பள்ளி நிர்வாகம் அரசுக்கு மேல் முறையீடு செய்ததில், அரசாணை (3டி) எண் 37, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 31.05.2022ல் மனுதாரரின் கோரிக்கையை சிறப்பினமாகக் கருதி நகரளவு எண்கள் 2/3, 2/4, 3/7, 3/9ல் கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு பகுதியில் திறந்தவெளி இட ஒதுக்கீடு ( OSR ) செய்யவும் மற்றும் அந்த இடத்தை பள்ளி நிர்வாகம் உள்ளாட்சிக்கு பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதித்து ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், மாநகராட்சியால் மேற்கண்ட அரசாணைகளின் நகல் கிடைக்கப்பெறவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து, உள்ளூர் திட்டக்குழுமத்திடமிருந்து பெறப்பட்ட அரசாணையின் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் உதவி ஆணையரான எனது 17.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6) திருச்சிராப்பள்ளி, வார்டு குழு அலுவலகம் 5ன் உதவி ஆணையர் தனது 17.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்ககண்டவாறு தெரிவித்துள்ளார்:

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்.52, கோ அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட சர்வே வார்டு எண் AA பிளாக் 1, நகரபுல எண் 2/3, 2/4 என்ற இடத்தில் அமைந்துள்ள கமலா நிக்கேத்தன் பள்ளி கட்டிடத்திற்கு, திட்ட மற்றும் கட்டட அனுமதி கோரி திரு.வி.ஆர். சத்தியமூர்த்தி, மேலாண்மை இயக்குனர், PAKT கல்வி அறக்கட்டளை சார்பாக 20.02.2018ம் தேதியில் விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து உதவி ஆணையர் அலுவலகத்தினால் இடம் நேராய்வு செய்யப்பட்டு உத்தேச இடத்திற்கு அணுகு சாலை பொதுப்பணித் துறையினருக்கு சொந்தமான சாலை என்பதால், சாலை உபயோகம் தொடர்பாக, பொதுப்பணித்துறையினரின் தடையின்மை

சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்நிலையில் மேற்படி கல்வி நிறுவனத்தினரால் எவ்வித விபரமும் சமர்ப்பிக்கப்படாததனைத்தொடர்ந்து, அனுமதியின்றி கட்டுமானப்பணி நடைபெற்று வருவதை அறிந்து, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு தற்காலிக ஆணை 296(1) (2) மற்றும் உறுதி ஆணை 296(3) நோட்டீஸ் மற்றும் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 2(எ), 57ன்படி Tamil Nadu Twon Country Planning(Amendment) Act, 2008 (ACT No.61/08)ல் கட்டுமானத்தை பூட்டி முத்திரை வைத்திட (Lock and Seal) மாநகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை தெரிவித்தும், மேலும் 30 நாட்களுக்குள் முறைப்படி அனுமதி பெற்றுக்கொள்ளகோரி அறிவிப்பு 26.04.2019 அன்று மனுதாரருக்கு சார்வு செய்யப்பட்டது.

ஆனால் மேற்கண்ட பள்ளி அறக்கட்டளையின் 08.05.2019ந் தேதிய கடிதத்தில், கட்டி முடிக்கப்பட்ட பள்ளி கட்டிடத்திற்கு தரைகீழ்தளம், தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடத்திற்கு திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி மேல்முறையீட்டு விண்ணப்பம், மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் இடம் நேராய்வு செய்யப்பட்டதில், கட்டட பணி முடிவுறும் நிலையில் உள்ளது என்பதால் ஆவணங்களுடன் உரிய முகவரியிட்டு மேல் முறையீட்டு விண்ணப்பத்தை விண்ணப்பிக்க அறிவுறுத்தி, கடந்த 30.05.2019 அன்று மனுதாரருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து மனுதாரர் தனது 06.06.2019ந் தேதிய கடிதத்தில் மூடி முத்திரையிடும் நடவடிக்கையினை நிறுத்தி வைக்கும்படி கோரியிருந்தார். மேலும், பள்ளி நிர்வாகத்தினர் சார்பாக, அரசுச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை அவர்களுக்கு 07.06.2019ந்தேதிய கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 07.06.2019 அன்று கட்டிடத்தினை மேற்கொள்ளப்படவிருந்த மூடி முத்திரையிடும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், திரு. செந்தில்குமார், கம்பரசம்பேட்டை, திருச்சி மற்றும் திரு. ஜெயக்குமார், தில்லை நகர், திருச்சி ஆகியோரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர், சென்னை அவர்களுக்கு மேற்படி தனியார் பள்ளி, வாய்க்காலினை ஆக்கிரமிப்பு செய்தும், எவ்வித கட்டட அனுமதி பெறாமலும் சட்ட விரோதமாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது எனத்தெரிவித்து புகார் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து இவ்வலுவலக நகர் சார் ஆய்வாளரின் அறிக்கை பெறப்பட்டதில் மேற்கண்ட புகாரில் தெரிவித்துள்ள வார்டு எண்.AA, பிளாக் 1, நகர அளவை எண்.1,6,8ல் பள்ளிக் கட்டுமானம் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை எனவும் நகர சார் ஆய்வாளரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்ற தகவலை இதன் மூலமாக தங்களது பார்வைக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரர்களின் மனு, மனுதாரர் திரு.ஜெயக்குமாரின் வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 5ன் உதவி ஆணையர் அறிக்கை மற்றும் உதவி ஆணையர், மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

டவுன் சர்வே எண் 8 ஆகிய 3 சர்வே எண்ணில் உள்ள வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து தனியார் பள்ளி உரிய கட்டிட அனுமதி பெறாமல் சட்ட விரோதமாக கட்டடம் அமைத்துள்ளனர். நீர் நிலையையொட்டி 15 மீட்டர் தொலைவுக்கு கட்டடம் கட்ட அனுமதி வழங்கக்கூடாது என விதிகள் இருந்தும் மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து தனியார் பள்ளி அமைத்துள்ளனர். இது குறித்து கோ அபிஷேகபுர கோட்ட உதவி ஆணையருக்கு பலமுறை புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்கள்.

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 52, கோ அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட சர்வே வார்டு எண் AA பிளாக் 1 நகரபுல எண் 2/3 2/4 என்ற இடத்தில் அமைந்துள்ள கமலா நிக்கேத்தன் பள்ளி கட்டடம் அனுமதியின்றி கட்டப்பட்டு வருவதை அறிந்து, அப்பள்ளிக்கட்டடத்திற்கு Lock and Seal கடந்த 26.04.2019 அன்று மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பள்ளி நிர்வாகம், தங்களது கட்டடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி மேல்முறையீட்டு மனு மாநகராட்சியிடம் அளித்துள்ளனர். அம்மனு மாநகராட்சியால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து பள்ளி நிர்வாகம் அரசுக்கு மேல்முறையீடு செய்ததன், அடிப்படையில் அரசாணை (3டி) எண் 37, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 31.05.2022ல் மனுதாரரின் கோரிக்கையை சிறப்பினமாகக் கருதி Managing Trustee, PAKT Educational Trust, Kamala Niketan Montessori School, திருச்சி அவர்களால் திருச்சிராப்பள்ளி மாவட்டம்/மாநகராட்சி–கோ.அபிஷேகபுரம் கோட்டம், கோ.அபிஷேகபுரம் கிராமம், வார்டு AA, பிளாக் 1, நகரளவு எண்கள் 2/3, 2/4, 3/7, 3/9 (பழைய சர்வே எண்கள் 8/3, 8/4, 9/4, Apt. 9/4Bpt)இல் கட்டப்பட்ட 6663.00 ச.மீ. மனைப்பரப்பில் நிலையிலுள்ள பள்ளி கட்டடம் அனுமதி கோரியது, இதனை இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களால் அனுமதி மறுத்து திருப்பப்பட்டதை தொடர்ந்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் பிரிவு 79ன் கீழ் அரசுக்கு செய்யப்பட்ட மேல்முறையீட்டை அவருடைய பிரஸ்தாப பள்ளிக்கட்டிடத்திற்கு அருகே 38.6 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பகுதியில் திறந்தவெளி இட ஒதுக்கீடு (OSR) செய்யவும் மற்றும் பகுதி வாகன நிறுத்துமிடத்தை உத்தேசிக்கக் கோரும் மேல் முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்று அந்தத் திறந்தவெளி இடத்தை மனுதாரர் உள்ளாட்சிக்கு பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் மூலம் ஒப்படைவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம் வார்டு AA பிளாக்: 1 நகரளவை எண். 1,6,8–ல் கமலா நிக்கேத்தன் பள்ளி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளதாக வரப்பெற்ற மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு நகரளவை ஆவணங்களை கொண்டு நகரசார் ஆய்வாளரால் அளவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி வார்டு AA பிளாக் 1, நகரளவை எண் 1 என்பது அரசு புறம்போக்கு பரப்பு 2.9250.0 வாய்க்கால் எனவும் நகரளவை எண் 6 என்பது அரசு புறம்போக்கு பரப்பு 4.2400.0 வாய்க்கால் எனவும் நகரளவை எண் 8 என்பது பரப்பு 3.0300.0 அரசு புறம்போக்கு என்றும் உள்ளது. மேற்படி நகரளவை எண் 1,6,8ல் தற்போது கமலா நிக்கேத்தன் பள்ளி ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்பதையும் நகரசார் ஆய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது. எனவே, அரசாணை (3டி) எண் 37 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 31.05.2022ன்படி திறந்தவெளி இட ஒதுக்கீடு (OSR) செய்யவும் மற்றும் அந்த இடத்தை பள்ளி நிர்வாகம் உள்ளாட்சிக்கு பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் ஒப்படைப்பு

செய்யப்பட்டுள்ளதா என்பதையும், மேலும் நடைபாதையில் நடைபயிற்சி மேற்கொள்பவர்களுக்கு எந்தவித இடையூறு இல்லாமல் இருப்பதை உறுதி செய்திடவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. நடைப் பயிற்சிக்கு மறுபடியும் தடைகள் ஏற்படுத்தினால் பள்ளி மீதும் சம்பந்தப்பட்ட கள அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. செந்தில்குமார்,
   4/2, வடக்கு தெரு,
   கம்பரசம்பேட்டை, திருச்சிராப்பள்ளி – 620 101.
2. திரு. ஜெ.ஜெயக்குமார்,
   த/பெ. ஜெயராமன்,
   20/1, தாமரை சாலை, அண்ணாமலை நகர்,
   தில்லை நகர், திருச்சிராப்பள்ளி – 620 018.
3. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
4. உதவி ஆணையர்,
   ஸ்ரீரங்கம் கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

10/11/22

செயலாளர்.